நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 51/2026

## P.W.1 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வி |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்லதுரை |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | குமாரபாளையம் |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | **PW1** |
| வயது | : | 26 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 24–ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், பொறுப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததாலும், சாட்சியும் வழக்கு தரப்பினர் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சியை மீண்டும் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சிரமம் ஏற்படும் என்பதாலும், அது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதாலும், இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.29 AM

1. நான் தற்போது வெப்படையில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன செல்லதுரை எனது கணவர் ஆவார். கடந்த 12.10.2025ம் தேதி மாலை நேரத்தில் எனது கணவர் நான் வீட்டில் இருக்கும்போது வெளியில் செல்வதாக சொல்லிவிட்டு கிளம்பி சென்றார். எனது கணவர் சென்ற பிறகு சுமார் 2 மணி நேரம் கழித்து அசோக் என்பவர் எனக்கு போன் செய்து எனது கணவருக்கு விபத்து ஏற்ப்பட்டு மேட்டுர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். அவர் எனது கணவரின் மாமா மகன் ஆவார்.

2. அதன்பிறகு ஒரு கார் ஏற்பாடு செய்து நானும், எனது மாமியார் ராஜாமணியும், மருத்துவமனைக்கு வருவதற்கு உள்ளாகவே எனது கணவர் இறந்துவிட்டதாக மேற்படி அசோக் தகவல் சொன்னார். அதன்பிறகு எனது கணவரை பார்த்தபோது அவருக்கு தலையிலும், மூக்கிலும் ரத்தம் வந்து கொண்டிருந்தது. அதன்பிறகு எனது மாமியாருடன்மேட்டுர் காவல் நிலையம் சென்றபோது காவல் நிலையத்தில் இருந்த ஒரு காவலர் புகாரை எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார். புகாரை எழுவதற்கு எனது பெயர் முகவரியை தவிர வேறு எந்த விவரங்களையும் என்னிடம் கேட்கவில்லை. அந்த புகாரை நான் படித்து பார்க்கவில்லை. அந்த புகாரில் கையெழுத்து மட்டும் போட்டேன். **(அந்த புகாரில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. ஒரு கையெழுத்து மட்டும் போட்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது. கையெழுத்து மட்டும் கேட்டார்கள். புகாரில் உள்ள கையெழுத்தை மட்டும் போட்டேன். இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.47 AM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 51/2026

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜாமணி |
| தந்தை / கணவர் பெயர் | : | உத்தரமூர்த்தி |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | குமாரபாளையம் |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 50 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், பொறுப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததாலும், சாட்சியும் வழக்கு தரப்பினர் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சியை மீண்டும் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சிரமம் ஏற்படும் என்பதாலும், அது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதாலும், இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.48 AM.

1. நான் தற்போது வெப்படையில் குடியிருந்து கட்டிட வேலைக்கு சென்று வருகிறேன்.இந்த வழக்கில் இறந்து போன செல்லதுரை எனது மகன் ஆவார். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு நான் எனது வீட்டில் இருக்கும் போது எனது மருமகளுக்கு அசோக் என்பவர் போன் செய்து எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் இறந்து விட்டதாக தகவல் சொன்னார். அதன் பிறகு மருத்துவமனையில் சென்று அடிபட்ட எனது மகனை பார்த்துவிட்டு காவல் நிலையம் சென்று நானும் எனது மருமகளும் புகார் கொடுத்தோம். காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை. விசாரித்தாலும் நான் அப்போது சொல்லும் நிலையில் இல்லை

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.56 AM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 51/2026

## P.W.3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | உத்தரமூர்த்தி |
| தந்தை / கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | – |
| வட்டம் | : | குமாரபாளையம் |
| மாவட்டம் | : | நாமக்கல் |
| சாட்சி வரிசை எண் | : | PW3 |
| வயது | : | 56 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**( கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதாலும், பொறுப்பு அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லாததாலும், சாட்சியும் வழக்கு தரப்பினர் ஆஜரில் இருப்பதை கருத்தில் கொண்டும், மேற்படி சாட்சியை மீண்டும் இந்த நீதிமன்றத்தில் ஆஜர் செய்வது சிரமம் ஏற்படும் என்பதாலும், அது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என்பதாலும், இந்த நீதிமன்றம் தாமாக சாட்சியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது.)**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.56 AM.

1. நான் தற்போது வெப்படையில் குடியிருந்து பந்தல் வேலைக்கு சென்று வருகிறேன்.இந்த வழக்கில் இறந்து போன செல்லதுரை எனது மகன் ஆவார். சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு நான் எனது வீட்டில் இருக்கும் போது எனது மருமகளுக்கு அசோக் என்பவர் போன் செய்து எனது மகனுக்கு விபத்து ஏற்பட்டு மருத்துவமனையில் இறந்து விட்டதாக தகவல் சொன்னார். அதன் பிறகு எனது மனைவியும், மருமகளும் மருத்துவமனையில் சென்று அடிபட்ட எனது மகனை பார்த்துவிட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துள்ளார்கள். காவல்துறையினர் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த விபத்து எவ்வாறு நடைபெற்றது என்று எனக்கு தெரியாது. யாருடைய கவனக்குறைவால் நடைபெற்றது என்று எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 11.59 AM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No. 51/2026**

**P.W.4 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மோகன் |
| தந்தை / கணவர் பெயர் | : | மாதையன் |
| கிராமம் | : | மேட்டூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 24–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.40 PM

1. நான் தற்போது மேட்டூர் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் மேட்டூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது கடந்த 13.10.2025 ம் தேதி நிலையம் ஆஜராகி தனது கணவரின் இறப்பு குறித்து புகார் கொடுத்ததின் பேரில் கடந்த 13.10.2025 ம் தேதி காலை

06.00 மணிக்கு நிலைய குற்ற எண்.513/2025 ச.பி.281, 106(1) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்தேன். ( **புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவை கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்திற்கும், சம்மந்தப்பட்ட மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். இவ்வழக்கினை புலன் விசாரணைக்காக புலன் விசாரணை செய்யவேண்டி காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வாதி கொடுத்த பொய்யான புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 03.45 PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**